கோப்பல் தமிழ்க் கல்வி மையம்
வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

துளிர் – 4
இதழ் – 4

ஜனவரி–2019

விளம்பி ஆண்டு
தை மாதம்

# துளிர்

## வேதாளம் சொல்லும் கதை

*தன்முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்ரமாதித்தன் மயானத்தில் இருக்கும் முருங்கைமரத்தில் தொங்கிக் கொண்டிருந்த உடலைத் தூக்கிக் கொண்டு சென்றான். அதனுள் இருந்த வேதாளம் சிரித்துக் கொண்டே "அறிவிற் சிறந்த மன்னா, உனக்கொரு கதை சொல்கிறேன் கேள். அந்தக் கதையின் முடிவில் உன்னிடம் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீ சரியாக விடையளிக்காவிட்டால் உன் தலை சுக்குநூறாகி விடும்" என்றது.*

*விஜயபுரியில் ரத்னாகரன் என்ற வியாபாரிக்கு ராமு என்றொரு மகன் இருந்தான். இயற்கையிலேயே மிகவும் தயாள குணம் படைத்த ராமு, யாரேனும் உதவி என்று அவனை நாடி வந்தால், மறுக்காமல் செய்யக் கூடியவன். ராமுவிற்கு மனோகரி என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். ஒரு நாள் அவள் ராமுவிடம், "உங்களை உதவி செய்ய வேண்டாம் என்று தடுக்கவில்லை. ஆனால் நீங்கள் செய்த தானங்களால் அவர்கள் பயனடைந்தார்களா என்று ஆராயுங்கள். அப்படி இல்லையெனில் மாற்று முறையில் உதவி செய்ய முயற்சிக்கலாம்" என்று கூறினாள்.*

*அதை ஒப்புக் கொண்ட ராமு முதலில் சமீபத்தில் பண உதவி செய்திருந்த சங்கரன் வீட்டிற்கு சென்றான். அவன் ராமுவைப் பார்த்து, "நீ தந்த பணத்தில் விருந்து தயாரித்து உண்டதில் என் பிள்ளைக்கும், மனைவிக்கும் உடல் நலம் கெட்டுப் போய் விட்டது. பணமெல்லாம் விருந்தில் கரைந்து விட்டது. இப்போது மருத்துவருக்கு வேறு தண்டச் செலவு" என்றான்.*

*இது போல் இன்னும் சில வீடுகளுக்கு சென்று ராமு விசாரித்த போது ஒருவர் கூட அவன் கொடுத்த பணத்தை ஒழுங்காக பயன்படுத்தவில்லை என்று தெரிந்தது. மிகுந்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான். மனைவியிடம் சென்று விஷயத்தைக் கூறினான். அவள், "மனிதர்களுக்கு உதவுவது நல்ல காரியம் தான். நீங்கள் ஏன் மருத்துவத் தொழிலைக் கற்றுக் கொண்டு பலருக்கு உதவக் கூடாது?" என்று கேட்டாள். மேலும் வேதாரண்யத்தில் வைத்தியானந்தா என்ற யோகி ஒருவர் உள்ளார். அவரிடம் கற்றுக் கொண்டால் ஒரே ஆண்டில் நீங்கள் நல்ல மருத்துவர் ஆக முடியும் என்றாள்.*

*ராமு உடனே வேதாரண்யம் சென்று வைத்தியானந்தாவிடம் சீடனானான். ஒரே வருடத்தில் கற்றுத் தேர்ந்தும் விட்டான். அந்த யோகி அவனிடம், "எனக்குத் தெரிந்த அனைத்தையும் உனக்கு சொல்லிக் கொடுத்து விட்டேன். அரிய நோய்களைத் தீர்க்கும் முக்கியமான மந்திரங்களின் ஓலைச்சுவடிகள் என்னிடம் உள்ளது. அதை இப்போது உனக்குத் தர மாட்டேன். நீ சுயநல நோக்கமே இல்லாமல் நேர்மையான மருத்துவனாகத் திகழ்கிறாய் என்று நிரூபணம் ஆன பிறகே, அதை உனக்குத் தருவேன், சென்று வா" என்று கூறி அவனை ஆசிர்வதித்து அனுப்பினார்.*

*மந்திர ஓலைச்சுவடிகளை பெருவானா ராமு .. அடுத்த இதழில் பார்க்கலாம்!!*

*-விஷ்வசாந்தி*

## கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு

1. **நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை, அதே விலையில் *https://smile.amazon.com* இணையதளம் மூலம் பெறுங்கள்.**

2. **நீங்கள் செலவு செய்த தொகையில் ஒரு சிறு பகுதி, அமேசான் *(Amazon)* நிறுவனத்தால் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.**

3. **"*DFW tamil foundation*" என்று *smile.amazon.com* இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.**

amazon.com Smile
You shop. Amazon gives.

## நிகழ்வறிவோம்- பொங்கலோ பொங்கல்

உலகிற்கு ஒளி தரும் சூரியனை வணங்கி, உணவிடும் உழவருக்கும் அவர்க்கு உதவிடும் எருதையும் சிறப்பிக்க கொண்டாடும் தைப் பொங்கல் திருநாள் வாழ்த்தினை நம் கோப்பல் தமிழ்ப் பள்ளி குழந்தைகளுக்கும், அவர்தம் குடும்பத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடல் கடந்து, இடம் பெயர்ந்து வாழ்ந்தாலும், தமிழரின் பாரம்பரிய திருவிழாவான பொங்கல் திருநாளை, டல்லாஸ் நகரிலும் நடந்த தமிழ் குழுமங்கள் திட்டமிட்டுள்ளன. குழந்தைகளுக்கு இம்மாதிரி விழாக்கள் ஒரு முன்மாதிரியாக இருக்குமென்பதால், தவறாமல், உங்கள் குழந்தைகளை இந்த திருவிழாக்களில் பங்கெடுக்க வேண்டுகிறோம்.

உழவே உயர்வெனபதை உலகிற்குணர்த்துவோம் இப்பொங்கல் நன்நாளில் !

-சிவா

# மாணவர் பக்கம்

*நம் பள்ளியின் எட்டாம் நிலை மாணவர்கள் பாமா விஜயம் திரைப்படத்தைப் பார்த்து அதைப் பற்றிய தங்கள் கருத்துகளைக் கட்டுரையாக எழுதினார்கள். மாணவர்களின் தமிழ் எழுத்துப் பயிற்சியை ஊக்குவிக்கும் விதமாக அவற்றில் ஒன்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். மற்றவற்றை வரும் இதழ்களில் பார்க்கலாம்.*

ரம்யா செங்குட்டுவன்
நிலை - 8

## கஜா புயல்

நவம்பர் 5-ஆம் தேதி, இந்தியப் பெருங்கடலில் குறைந்த காற்று அழுத்தமாக உருவான புயல், மெதுவாக நகர்ந்து வங்கக்கடலில் மையம் கொண்டது. இந்த புயல் யானையைப் போல் பெரிதாக இருந்ததால் கஜா புயல் என்று பெயரிடப்பட்டது. நவம்பர் 5-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரை நீடித்தது.

தமிழக அரசு முன்னேற்பாடாக எண்பதாயிரம் பேரைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தது. உணவு உடை வழங்கப்பட்டு, மருத்துவ வசதியும் செய்யப்பட்டது. பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

கஜா புயல் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைத் தாக்கியது. மணிக்கு 110 கிலோமீட்டர் வேகத்தில் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, காரைக்கால், கடலூர், திருச்சி, ராமநாதபுரம் ஆகிய இடங்களில் பெருத்த சேதம் உண்டாக்கியது.

கஜா புயலால் மக்கள் வீடுகளையும் கால்நடைகளையும் இழந்தனர். மேலும் 56,000 விளைநிலங்கள் சேதம் அடைந்தன. 5-ஆயிரம் படகுகள் உடைந்தன. ஒரு லட்சம் மின்சார கம்பங்கள் விழுந்தன. 63 பேர் இறந்தனர்.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, → அரசும், தொண்டு நிறுவனங்களும் மற்றும் நம்மை போன்ற வெளிநாட்டில் வாழும் தமிழர்களும் உதவி செய்கிறார்கள். வீடு, உடைமை மற்றும் உறவை இழந்த மக்களுக்கு, நம்மால் முடிந்த உதவிகளை செய்யலாம். வாருங்கள்.

*இனிய தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை டல்லாஸ் மாநகர தமிழ்க் குடும்பங்களுடன் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, இம்மாதம் DFW தமிழ் நண்பர்கள், மற்றும் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம் நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விவரங்கள் கீழே:*






## 'தில்' இருந்தா சொல்லுங்க

*நிலை 5 முதல் நிலை 8 வரை உள்ள மாணவர்களுக்கான புதிர் போட்டி:*

ஜஸ்டின் பொய் சொல்வதாக ஜான் சொல்கிறார்.

டாம் பொய் சொல்வதாக ஜஸ்டின் கூறுகிறார்.

ஜஸ்டின் மற்றும் ஜான் ஆகிய இருவரும் பொய் சொல்வதாக டாம் கூறுகிறார்.

மூன்று பேரும் எப்போதும் உண்மை பேசுவார்கள் என்றோ அல்லது எப்போதும் பொய் பேசுவார்கள் என்றோ நினைத்துக் கொண்டால், யார் உண்மை பேசுகிறார்கள்?

*நிலை 3 மற்றும் நிலை 4 மாணவர்களுக்கான புதிர் போட்டி:*



1. ப யி ன டி கு ங் ழ ர்
2. ட ந் பூ ம் ட் தோ
3. பு று ச் க ம் ரு சா

*To submit your answer copy and paste the link or click :* https://goo.gl/forms/V3auuWs036nJ626u2

## குறள் சொல்லும் பொருள்

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

சொற்பதம்:

தெய்வத்தான் - தெய்வத்தால்
ஆகா தெனினும் -முடியாதது என்றாலும்
முயற்சிதன் - முயற்சி செய்தல் தன்
மெய்வருத்தக் - உழைப்பிற்கான
கூலி தரும் - பயனைத் தரும்

"தெய்வத்தால் முடியாதது" என்று சொல்லப்படும் செயல்களையும், நாம் கடுமையாக முயற்சித்தால் அதில் வெற்றி பெற்று பயனை அடையலாம்.

## நூல் அறிவோம் – இரும்புக் கை மாயாவி

முன்னரே தமிழில் பல படக்கதை இதழ்கள் வந்திருந்தாலும், **1972-ம் ஆண்டு பொங்கல்** அன்று வெளியான `இரும்புக் கை மாயாவி'தான் தமிழ் படக்கதை உலகுக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கியது. இங்கிலாந்தில் `The Steel Claw' என்ற பெயரில் உருவாக்கப்பட்ட இந்த படக்கதை தொடர், தமிழகத்தில் பெற்ற வரவேற்பு கொஞ்சநஞ்சமல்ல. சொல்லப்போனால், இங்கிலாந்தில்கூட இவ்வளவு வரவேற்பு கிடைக்கவில்லை.


பிரபல விஞ்ஞானி பாரிங்கரிடம் உதவியாளராகப் பணிபுரிபவர், ஒரு விபத்தில் தனது வலது கையை இழந்த லூயிஸ் கிராண்டேல். எஃகினால் செய்யப்பட்ட ஓர் உலோகக் கை, இவரது மணிக்கட்டில் பொருத்தப்பட்டது. பாரிங்கர் ஒரு பரிசோதனையை மேற்கொண்டபோது உயர் அழுத்த மின்சாரம் பாய்ந்து, அவரது பரிசோதனைக்கூடமே விபத்துக்குள்ளானது. அந்த விபத்தில் கிராண்டேல் மீது அந்த உயர் அழுத்த மின்சாரம் பாய்ந்து யாருமே எதிர்பார்க்காத ஒரு புதிய விளைவை உண்டாக்கிவிடுகிறது. மின்சாரம் பாய்ந்ததில் கிராண்டேலின் முழு உடலும் மாயமாக, அவரது உலோகக் கை மட்டும் கண்ணுக்குத் தெரிகிறது. இந்த மாயமாக மறையும்தன்மை பாய்ச்சப்பட்ட மின்சாரத்தின் அளவைப் பொறுத்து, சில நிமிடங்களிலிருந்து ஒரு மணி நேரம் வரை நீடிக்கும்.


இந்த விபத்தினால் மனக்குழப்பம் அடைந்த கிராண்டேல், தனக்குக் கிடைத்துள்ள சக்தியின் மதிப்பை உணராமல், சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுகிறார். பிறகு தெளிவுபெற்று, பிரிட்டிஷ் உளவுத் துறையான நிழற்படையில் சேர்ந்து மிகச்சிறந்த உளவாளியாகிறான். ஒவ்வொரு முறை மின்சாரத்தைத் தொடும்போதும் மாயாவியின் உடல் மாயமாக மறைந்துவிடும். இப்படித்தான் கதையைத் தொடங்கி, இரும்புக் கை மாயாவி கதாபாத்திரத்தை உருவாக்கினார் கென் பல்மர்.
நேரம் கிடைக்கும் போது இரும்புக் கை மாயாவியின் சாகசத்தை வாசியுங்கள், சுவாரசியமாக இருக்கும்... நன்றி : ஆனந்த விகடன்

## பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்

*நிலை 1 மற்றும் நிலை 2*
*மாணவர்களுக்கான புதிர் போட்டி:*







*To submit your answer copy and paste the link or click:*

https://goo.gl/forms/V3auuWs036nJ626u2

## தோழா தோழி

என்ன தோழி இன்று மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறாய் என்ன விஷயம் ?

ஆம் தோழா இன்று நாங்கள் பிட்சா சாப்பிட போகிறோம் ..எனக்கு மிகவும் பிடித்த உணவு..

என்ன தோழி நீ இந்த வகை உணவுகளைப் பற்றி இன்னமும் அறியாமல் இருப்பது எனக்கு ஆச்சர்யமாக உள்ளது .

நீ என்ன சொல்கிறாய் தோழா எனக்குப் புரியவில்லையே?

தோழி இது போன்ற உணவுகளில் மைதா மற்றும் தீங்கு விளைவிக்கும் சில ரசாயனங்கள் சேர்க்கப்படுகின்றன. இவைகள் பல நோய்களை உருவாக்கும்.

என்ன பிட்சாவில் இவ்வளவு கெடுதல் உள்ளதா ?

ஆம் தோழி, இது மட்டுமல்ல நூடுல்ஸ் மற்றும் செயற்கை நிறம் சேர்க்கப்பட்ட பொருட்களைக் காட்டி நமக்கு ஆசையைத் தூண்டுகின்றனர். இவையெல்லாம் நல்லதே அல்ல .


அப்படியா ?பின்பு எதைத் தான் சாப்பிடுவது ?

நமது இந்திய உணவு முறையில் உடலைப் பாதுகாக்கும் ஆரோக்கியமான அதே சமயம் சுவையான உணவுகள் பல இருக்கின்றன. பணியாரம், ஆப்பம், பூரி, பொங்கல், வடை என்று ஏராளமான வகைகள் இருக்கும் போது நாம் ஏன் ஆரோக்கியமற்ற உணவுகளைத் தேடிச் செல்ல வேண்டும் நமது இட்லி தான் உலகிலேயே சிறந்த உணவு என்று ஒரு ஆய்வு சொல்கிறது.

அருமையான தகவல் சொன்னாய் தோழா ..நன்றி *- விஷ்வசாந்தி*

## எண்களை வரிசையில் இணைக்கவும்

*மழலை*
*மாணவர்களுக்கான புதிர்*
*போட்டி:*



## விடுகதை

*1.ஊரெல்லாம் ஒரே விளக்கு , அதற்கு ஒரு நாள் ஓய்வு ..*
*அது என்ன ?*

*2 . இடி இடிக்கும் .. மின்னல் மின்னும்.. மழை பெய்யாது .. அது என்ன ?*

*விடை அடுத்த இதழில்...*

சென்ற இதழ் விடுகதைகளின் விடைகள்:

1. மிதிவண்டி 2. பூட்டு சாவி

*- விஷ்வசாந்தி*

### கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புக்களை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை *newsletter@coppelltamil.com* என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.**


### கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

***இடம்: IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;***
***கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: 5:00—7:00PM***
***www.coppelltamil.com email: connect@coppelltamil.com***

*https://www.facebook.com/CoppellTamil/?view_public_for=1019360444741468* *http://coppelltamil.com/calendar.htm*